தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 01.08.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு தேசிய வேளாண் உயர் கல்வி திட்டத்தின் கீழ் நிறுவன வளர்ச்சி திட்ட நிதி உதவி.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தில் நடைபெற்று வரும் தேசிய வேளாண் உயர் கல்வி திட்டத்தின் கீழ் வேளாண் பல்கலைக்கழக கல்லூரிகளில் கல்வி தரத்தினை மேம்படுத்த நிறுவன வளர்ச்சி திட்டத்தின் கீழ் 30 கோடி ரூபாய் இந்தாண்டு (2019-20) பெற்றுள்ளது. இந்த திட்டத்தின் மொத்த நிதியுதவி 25 கோடியை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கியுள்ளது. கடந்த காலங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கீகாரம் இல்லாததால் இந்நிதியுதவிக்கான போட்டியில் பங்கு பெற இயலவில்லை. ஆதலால் தேசிய பால் ஆராய்ச்சி நிறுவனம் கர்னால் மற்றும் ஏழு மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் இத்திட்டத்தின் மூலம் முதலாமாண்டில் நிதியுதவி பெற்றன.

கடந்த ஆண்டு நவம்பர் (2018)-ல் பேராசிரியர் முனைவர் நீ. குமார் அவர்கள் துணைவேந்தராகப் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சீரிய பல திட்டங்களை வகுத்து கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் மாற்றங்களை கொண்டு வந்ததன் விளைவாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் புதுதில்லியின் அங்கீகாரம் இந்த ஆண்டு கிடைக்கப்பெற்றது.

இதன் காரணமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தேசிய அளவில் **64** மாநில வேளாண் பல்கலைக்கழகங்களுக்கிடையே போட்டியிட்டு நிறுவன வளர்ச்சி திட்ட நிதியாக ரூ.30 கோடி பெற்றுள்ளது. மேலும் ஐந்து மாநில வேளாண் பல்கலைக்கழங்களும் இந்த நிதியுதவியைப் பெற்றுள்ளன. அதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதலிடம் பெற்றது. இந்த திட்டமானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஒன்பது உறுப்புக் கல்லூரிகளில் நடைபெறும் ஆறு இளங்கலைப் பட்டப்படிப்பு மேம்பாட்டிற்கு செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக, மாணவர்களுக்கு சிறந்த கற்கும் சூழ்நிலையை புதுமையான முறையிலும், கல்வி சீர்திருத்தங்கள், ஆசிரியர் மாணவர்களுக்கிடையே பன்முகத்தன்மையை அதிகரிக்கவும், திறன் மேம்பாடு, தொழில்முனைவோர்க்கான திறனை வளர்த்தல், கல்வி மேலாண்மையை அதிகரிக்கும் நோக்கில் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்தல் போன்றவைகளை செயல்படுத்தப்படும். இத்திட்ட காலகட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் ஆறு மாத கால பயிற்சி மேற்கொள்ளவும், வேளாண் ஆராய்ச்சி யுக்திகளை பகிர்ந்து கொள்ளவும் நிதி வசதி உள்ளது.

இந்த திட்டத்தினால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒட்டுமொத்தமாக கல்வியிலும், ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கி மிகச் சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் சிறந்த தொழில்முனைவோராகவும் உருவாகி இந்தியாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதன்மையான பல்கலைக்கழகமாக திகழும்.

மக்கள் தொடர்பு அலுவலர்